International Labour Organization

Australian AID

Norwegian Embassy
*Colombo*



# இலங்கையின் வட மாகாணத்திலுள்ள பெண்களின் பொருளாதார வல்லமைப்படுத்தல் மற்றும் கௌரவமான தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வதற்குமான ஓர் வலுவூட்டல் செயற்பாடு:

---

## சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் (ILO) LEED+ அணுகுமுறை

---



## பெண்களை வல்லமைப்படுத்துவதற்கான தற்போதைய மதிப்பின்படி அவர்கள் பொருளாதாரத்தில் பங்குபற்றுவதற்கும் வாய்ப்பைப் பெறுவதற்குமான பால்நிலை இடைவெளியை இல்லாதொழிப்பதற்கு 267.6 வருடங்கள் எடுக்கும்.*

ஊழியப்படையில் பெண்களின் முழுமையான பங்குபற்றுதலானது தேசிய வளர்ச்சி வீதங்களில் கணிசமான பங்களிப்பை ஏற்படுத்துமென பெருமளவான ஆய்வுமுடிவுகள் புலப்படுத்துகின்றன. பெண்களையும் யுவதிகளையும் மையப்படுத்திய பொருளாதாரமானது அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஈட்டித்தர வழிவகுக்கும்.

எனினும், பால்நிலை ரீதியான பாரபட்சம் காரணமாக பெண்கள் தனித்துவமான தடைகளை எதிர்கொள்கின்றனர். அவற்றுள் குறைதிறன் மற்றும் குறைந்தளவு ஊதியம் பெறும் தொழில்களில் அளவுக்கதிகமாக உள்வாங்கப்படுதல், கடுமையாக உழைத்தும் வறுமையில் வாழும் உச்சபட்ச நிலைப்பாடு, மற்றும் அதிகளவில் சுரண்டல் உள்ளடங்கலாக பாலியல் ரீதியிலான துன்புறுத்தல்களினால் பாதிக்கப்படுதல் போன்றன குறிப்பிடத்தக்கனவாகும்.


*World Economic Forum, Global Gender Gap Report 2021




## அண்ணளவாக வடமாகாணத்தில் வதியும் 4* க்கு 1 குடும்பம் பெண்தலைமை வகிக்கும் குடும்பமாகும்.

இவ்வகுப்பினர் எதிர்கொள்ளும் பிரதான சவால்களுள் ஒன்று மிகக்குறைவான வருமானமீட்டும் வாய்ப்புக்களாகும். பெண் தலைமைத்தாங்கும் குடும்பங்கள் மிகவும் நலிவுற்றனவாகவும் மற்றும் மிகக்குறைந்த சராசரி வருமானமீட்டும் குடும்பங்களாகவும் உள்ளனவென ஆய்வறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

*United Nations, Sri Lanka, Mapping of Socio-Economic Support Services to Female Headed Households in the Northern Province of Sri Lanka, 2015



# பாலியல் துன்புறுத்தல்கள், வன்முறைகள் மற்றும் வன்முறைகள் தொடர்பான அச்சம் பெண்களைப் பொருளாதார ரீதியிலான மேம்பாட்டுக்கு இட்டுச்செல்லாமைக்கான தொடர்ச்சியான தடைகளாகும்.


**'அதிகளவான பெண்கள், குறிப்பாக பெண் தலைமை வகிக்கும் குடும்பப் பெண்கள் தாம், தொழில் தருநர்களினாலும், சமூக அங்கத்தவர்களினாலும் மற்றும் வாய்ப்புக்களை வழங்கும் உத்தியோகத்தர்களாலும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாவதாக குறிப்பிடுகின்றார்கள்.'**

பெண்களின் பொருளாதார வல்லமைப்படுத்தலின் முக்கிய அம்சமாக அணுகுவதற்கான இயலுமை மற்றும் சுயாதீனமாக செயற்படக்கூடிய இயலுமை காணப்பட வேண்டும். அவற்றுள் அணுகுவதற்கான இயலுமை என்பது, திறன்கள், வளங்கள், சேவைகள் மற்றும் சந்தை வாய்ப்புகளை தடையின்றி சரிசமமாக அணுக்ககூடியத் தன்மை என்பது தீர்மானமெடுத்தல் சக்தியாகவும் அவ்வாறான தீர்மானங்களை செயற்படுத்தும் சக்தியாகவும் காணப்படுகின்றது. முதலாம் கட்டத்தில், LEED+ செயற்றிட்டமானது பெண்கள் தமது வாழ்வாதார செயற்பாடுகளில் அதிகளவு ஈடுபடுவதைக் கொண்டு அவர்களின் பொருளாதார வல்லமைப்படுத்தலுக்கு பங்காற்றியது. மேலும் இச் செயற்றிட்டமானது, பால்நிலை உள்ளீர்ப்பின் சில கூறுகளின் மீது கவனம் செலுத்தியிருந்தது. அதன் விளைவாக, குறிப்பிடத்தக்க மாற்றத்தினைக் காலாகாலமாக ஆணாதிக்கத்தில் திளைத்திருந்த மீன்பிடித்துறையில் அதிகளவான பெண்களை ஈடுபடுத்தியமையூடாக ஏற்படுத்தியிருந்தது.

இருப்பினும், பொருளாதார வல்லமைப்படுத்தலும் பங்குபற்றலும் எவ்வேளையிலும் சமூக வல்லமைப்படுத்தலுக்கும் உள்வாகலுக்கும் வழிவகுக்குமென கருதமுடியாதென LEED+ செயற்றிட்டத்தின் இறுதி மதிப்பீடு, LEED+ செயற்றிட்டத்தின் பால்நிலைசார் இடைவெளி மதிப்பீடு போன்ற பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அத்தகைய சமூக வல்லமைப்படுத்தல்கள் சமூகத்தில் முறைசார்ந்தோ முறைசாராமலோ புரையோடிப்போயுள்ள பால்நிலைசார் மீள்கட்டமைப்புகளில் அதிகம் தங்கியுள்ளதுடன் அக்கட்டமைப்புகள் சமமற்ற அதிகாரத்தையே மீளக்கொணர்கின்றன.

*International Labour Organization - Local Empowerment through Economic Development (ILO-LEED) Gender Gap Assessment 2018

## நெற்செய்கையில் முறைசாரா ஊழியர்களின் சராசரி நாட்கூலி (2013 மற்றும் 2017)




## விவசாய வேலைக்கு வாடகைக்கமர்த்திய தொழிலாளருக்கான சராசரி நாட்கூலி

| பிரதேசம் | பெண்களுக்கான கூலிகள் (ரூ.) | ஆண்களுக்கான கூலிகள் (ரூ.) | பால்நிலை கொடுப்பனவு இடைவெளி |
|---|---|---|---|
| ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு | 700 - 800 | 1,200 | 400 - 500 |
| வவுனியா வடக்கு, வவுனியா | 800 | 1,200 | 400 |
| பளை, யாழ்ப்பாணம் | 800 | 1,200 - 3,000 | 400 - 2200 |

## சமூகத்தில் தொடர்ச்சியாக நிலவுகின்ற பாதகமான பால்நிலை நெறிமுறைகள் பெண்களின் பங்களிப்பையும் செயற்திறனையும் மழுங்கடிக்கின்றன.

பிராந்தியத்தில் மேற்கொண்ட குழுக்களுக்கிடையிலான கலந்துரையாடல்களின்படி, பெண்களது பங்களிப்புகளை விடவும் ஆண்கள் தாம் மிகவும் கடினமாக உழைப்பதாகவும் சிரமமான தொழில்களை செய்வதாகவும் கருதுகின்றமையால் பால்நிலைசார் இடைவெளி பேணப்படும் கொடுப்பனவு முறை நிலவுவதாக ஆண்கள் நியாயப்படுத்துகின்றார்கள். அவ்வாறிருக்கையில் ஆண்கள் ஈடுபடும் அதேதொழில்களில் அவர்களுக்கு நிகராக கடினமாக ஈடுபடுகின்றபோதும் குறைந்தளவு ஊதியமே பெறுகின்றனரென பெண் குழுக்கள் குறிப்பிடுகின்றனர்.

*International Labour Organization - Local Empowerment through Economic Development (ILO-LEED) Gender Gap Assessment 2018



# பால்நிலை சமத்துவத்திற்கான LEED+ அணுகுமுறை

நாடொன்றின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி விரிவாக்கமானது, நலிவுற்ற குழுக்கள், பெண்கள் மற்றும் விசேட தேவையுடையவர்களைச் (PWDs) சென்றடைய வேண்டும். இதற்கு உள் இணைந்த பொருளாதார வளர்ச்சி (Inclusive economic growth) வழிவகுக்கும். ஏனெனில், இது அனைவருக்கும் சம வாய்ப்பும் பங்களிப்பும் வழங்குவதாகும்.

LEED+ செயற்றிட்டமானது குறிப்பாக ‘பெண்கள் மற்றும் விசேட தேவையுடையோரை இலக்காகக் கொண்டு அவர்களை உள்ளடக்கிய சமூகங்களுக்கு கௌரவமான மேம்பட்ட வேலை வாய்ப்புகள்“ மற்றும் “சிறிய மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் (MSMEs), பழங்கள், மரக்கறி, மீன்பிடி மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு தயாரிப்பு போன்ற துறைகளில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் (Coops) மற்றும் சமூகங்களில் பெண்களினதும் விசேடத் தேவையுடையவர்களினதும் பங்பற்றுதலையும் தீர்மானமெடுத்தலையும் மேம்படுத்தல்’ போன்றவற்றை மையப்படுத்திய விளைவுகளை கொண்டுள்ளது.

பாரியளவில் ஆண்வழி மரபுரிமை மேலோங்கியுள்ள வடக்கு பிரதேசத்தின் தனித்துவமான கலாசாரம் மற்றும் சமூக நுணுக்கங்கள் என்பவற்றை கவனத்திற்கொள்ளும் அதேவேளை, LEED+ ஆனது பால்நிலை உள்ளீர்ப்புக்கான நடைமுறை சார்ந்த, சூழ்நிலை மையப்படுத்திய, புத்தாக்கமிக்க அணுகுமுறைகளைத் தொடர்ந்தும் அமுலாக்குவதுடன் ஆராய்ந்தும் வருகின்றது.

# பெண்களின் பொருளாதார வல்லமைப்படுத்தலையும் கௌரவமான தொழிலைப் பெறும் வழியையும் பலப்படுத்துதல்

**பால்நிலை சமத்துவத்தை ஈட்டிக்கொள்வதில் பொருளாதார வல்லமைப்படுத்தல் இன்றியமையாததாகும். பெண்கள் பொருளாதாரத்தின் மகத்தான பங்காளர்களாவர். ஆனால் முன்னர் விபரித்ததற்கமைய கௌரவமான தொழிலைத் தக்கவைத்துக்கொள்ளும் திறன், பொருளாதார வளங்களை அணுகுதல், கொடுப்பனவு செலுத்தப்படாத பராமரிப்புப் பணி, வறுமையை எதிர்கொள்ளல் என்பவற்றினால் அவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.**

## அணுகுமுறையை நடைமுறைப்படுத்தல்

பெண்களின் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கான முதற்படியாக LEED+ ஆனது வடக்கிலுள்ள சிறிய மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்களுடன் வியாபார விரிவாக்கலின் போது முகாமைத்துவம், தொழிநுட்பம், செயல்முறை, சந்தைகளை அணுகல், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்கள் (OSH) போன்றவற்றிலுள்ள சவால்களைத் தீர்ப்பதற்காக இணைந்து பணியாற்றியுள்ளது. இத்தகைய வெற்றிகரமான விரிவாக்கலினூடாக புதிய தொழில் வாய்ப்புகள் உருவானது. இத்தொழில் வாய்ப்புகளைப் பெறும் வசதிகுறைந்த பெண்கள் இத்தகைய வியாபாரங்களுடன் தொடர்புப்படுத்தப்பட்டதன் மூலம் புதிய வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொண்டனர்.

விவசாயம் மற்றும் மீன்பிடித் துறையில் பெண்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக, LEED+ ஆனது பெண் விவசாயிகளுக்கு பொருட்களின் தரம், வினைத்திறன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமம் (OSH), விநியோகச் சங்கிலி முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவு என்பவற்றை விருத்திசெய்வதற்கான பயிற்சியை வழங்கியுள்ளது.

- இதற்கு மேலதிகமாக, நீர் உயிரின வளர்ப்புடன் தொடர்புறும் செயன்முறைகளிலுள்ள பெண்களுக்கு பண்ணை முகாமைத்துவம், நாற்றுப்பண்ணை பராமரித்தல் மற்றும் ஏனைய தொழில்நுட்ப முன்னேற்றங்களிற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதேபோன்று, விவசாயத்துறையிலுள்ளோர் வேளாண்மை மற்றும் அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவம், புதிய இயந்திர பயன்பாடு பற்றிய கற்றல்களின் மூலம் பலன் பெற்றுள்ளனர். பெண் விவசாயிகளுக்கு பொருத்தமான அரசாங்க மற்றும் தனியார் வியாபார அபிவிருத்தி சேவை (BDS) வழங்குனர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி உதவியளிக்கப்பட்டது.

- பெண்களின் பொருளாதார வல்லமைப்படுத்தலுக்காக கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து பணியாற்றுகையில், LEED+ ஆனது ஆய்ந்தறிந்திருந்த, வாய்ப்பு வளம் கூடிய விநியோகச் சங்கிலிகளான தென்னம் தும்பு, நிலக்கடலை, உழுந்து, சோளம் மற்றும் கடலட்டை போன்ற துறைகளில் பெண்கள் பிரவேசிப்பதற்குத் துணைப்புரிந்தது. இச்செயற்றிட்டமானது, கூட்டுறவு சங்கங்கள் மூலம் அவசியமான தொழில்நுட்பக் கருவிகள், கொள்முதல் செய்பவர்களுடன் பேரம்பேசுதல், சந்தை அணுகலை எளிதாக்குதல் மற்றும் நிதியியல்சார் அறிவை விருத்தி செய்தல் போன்றவற்றைத் தமது பெண் உறுப்பினர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அக்கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்தியது. இவை தனியார் துறை மற்றும் அரசாங்க பங்காளர்களான, கூட்டுறவுத் திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியவற்றினூடாக வழங்கப்பட்டன.

- LEED+ ஆனது குறைத்திறன் மற்றும் குறைவான ஊதியம் பெறும் தொழில்களிலுள்ள (உதாராணமாக, வலை பழுது-பார்த்தல் மற்றும் துப்பரவு செய்தல், மீன் சேகரிப்பு) பெண்களுக்கு நீலக்கால் கடல் நண்டு பதப்படுத்தல் நிலையங்களில் (Blue-swimmer crab Industry) வேலைவாய்ப்புகளை வழங்கியதன் மூலம் அவர்களின் தொழில் மற்றும் வருமான மேம்பாட்டிற்கு உதவியது. அதேசமயம் இச்செயற்றிட்டமானது, முகாமையுடன் இணைந்து கடலுணவு பதப்படுத்தல், தரம் பேணல் முதலிய பயிற்சிகளினூடாக திறன்விருத்தியில் பணியாற்றியுள்ளது. இது பெண்கள் மேற்பார்வையாளர்களாகவும் முகாமையாளர்களாகவும் உயர்வடைய வழிவகுத்தது. இதேபோன்ற செயன்முறை தென்னம் தும்பு மற்றும் ஏனைய விவசாயத் துறைகளிலும் பின்பற்றப்பட்டது.

- பெண் முயற்சியாண்மையாளர்களுக்கு ஆதரவு வழங்குவதை இலக்காகக் கொண்டு LEED+ ஆனது பலவகையான திட்டங்களை முன்னெடுத்திருந்தது. குறிப்பாக, ஒவ்வொரு முயற்சியாண்மையாளர்களினதும் வியாபாரத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் துணைபுரிந்துள்ளதுடன் செலவுப்பகிர்வு அணுகுமுறையினூடாக அவர்களின் வியாபாரங்களை விரிவாக்குவதற்கான நிதியுதவியையும் வழங்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக, வியாபார விருத்தி, உள்வாங்கல், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமம் போன்றவற்றில் அறிவு மற்றும் திறன்களை பெருக்கிக் கொள்வதற்கான உதவிகளை வழங்கியுள்ளதோடு வியாபார சேவை வழங்குனர் வலையமைப்புக்களுடனும் அவர்களை இச்செயற்றிட்டம் இணைத்துள்ளது.

## ‘தேசத்தின் மேம்பாட்டிற்கு பெண்கள் பொருளாதார ரீதியில் சுயாதீனமடைய வேண்டும்: அதற்காக, அவர்களுக்கான பாதுகாப்பான மற்றும் நம்பகமான சூழலை உருவாக்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு தொழில்தருநருக்குமுண்டு.’

சுபாஸ்கரன், உரிமையாளர், குயின் தயாரிப்புகள் - முல்லைத்தீவு, இலங்கை

LEED+ செயற்றிட்டத்தில் இணைந்துக் கொண்ட இவ் குயின் சிறிய நடுத்தர தொழில் முயற்சியானது குழந்தை பராமரிப்பக வசதிகள், குடும்பப் பெண்களுக்கான நிதி வசதிகள், குறிப்பாக கடன் பொறியில் சிக்கிய பெண் தலைமைக் குடும்பப் பெண்கள் மற்றும் பாதுகாப்பான வேலைச் சூழல் என்பவற்றினூடாக வேலைத்தள கலாசாரத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பதோடு பெண்கள் கௌரவமான தொழிலை அணுகுவதற்கான நடவடிக்கைகளையும் அதிகரித்து வருகின்றது.



# நேர்மறை பாகுபாட்டு நடைமுறைகளினூடாக (Affirmation Action) உள்வாங்கலை மேம்படுத்தல்

நேர்மறை செயற்பாடுகள் என்பது உண்மையான, பயனுறுதி வாய்ந்த சமத்துவத்திற்கான மாற்றத்தை ஈட்டிக் கொள்ளத் துணைபுரிகின்றது. அம்மாற்றம் குறிப்பிட்ட மக்கட்குழு வசதியற்றோராகவோ ஒதுக்கப்பட்டோராகவோ காணப்படும் சூழ்நிலைகளை திருத்தியமைக்ககூடியதாக இருக்கும். சமூகமொன்றில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையில் பாரியளவில் சமச்சீரின்மை காணப்படுகின்ற வேளையில், நேர்மறை செயற்பாடுகளானது விசேட நடவடிக்கைகளினூடாக அணுகுதலை உருவாக்குகின்றது. அதன் மூலம் சமூகம், கட்டமைப்பு மற்றும் பொருளாதாரம் சார்ந்த பிரதிகூலங்கள், புறந்தள்ளும் போக்கு, பாரபட்சம் போன்றவற்றை வெற்றிகொள்வதற்கும் பிரதிநிதித்துவதற்குமான ஆதரவு வழங்கப்படுகின்றது. எனினும் நேர்மறை செயற்பாட்டிற்கான பரந்துபட்ட அங்கீகாரம் மற்றும் செயற்பாட்டிற்கும் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் ஒரு மனோபாவ மாற்றம் அவசியமாகும்.

## அணுகுமுறையை நடைமுறைப்படுத்தல்

- LEED+ ஆனது சிறிய மற்றும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் (MSMEs), தனியார் நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களை பங்காளர்களாக தேர்ந்தெடுக்கும் போது 'பால்நிலை'யானது ஓர் பிரதான தெரிவுப்பிரமாணமாகக் கொள்ளப்படுகின்றது. பால்நிலையில் பிரதானமாகக் கொள்ளப்படும் திட்டவட்டமான நடைமுறைகள், வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள் என்பன இதுவரையில் கைச்சாத்திடப்பட்ட 12 பங்குதாரர் ஒப்பந்தங்களில் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்கொண்டு, நேர்மறை செயற்பாட்டிற்கான தனியான பாதீட்டுப் பகுதியொன்று அனைத்து ஒப்பந்தங்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.
- தலைமைத்துவ பதவிகளில் பெண்களின் பங்குபற்றலுக்கான இடர்பாடுகளை கவனத்திற்கொண்டு, பண்டத்தரிப்பு கூட்டுறவு சங்கத்தின் கூட்டத்திற்கான நேரங்களை காலையிலிருந்து மாலை வேளைக்கு மாற்றுவதற்கும் வாரஇறுதி நாட்களில் நடாத்துவதற்குமான கலந்துரையாடலை LEED+ ஆரம்பித்து வைத்தது. இது குடும்பத்தின் அன்றாட வேலை மற்றும் பராமரிப்பு பொறுப்புகள் போன்றவற்றிற்காக பெண்கள் ஒதுக்கியுள்ள நேரத்தை சீர்குலைப்பதனை தவிர்ப்பதனூடாக பெண்களின் பங்களிப்பை அதிகரித்ததுடன் அவர்களின் தொடர்ச்சியான வருகையை ஊக்குவித்தது. இம்மாற்றமானது, கூட்டுறவு சங்கத்தின் இயக்குனர் சபையில் பெண் தலைவர்களுக்கான வளமான வாய்ப்பினை மேம்படுத்தியது.
- அதேவேளை பாடசாலை விடுமுறை காலங்களில் வருமானமீட்டும் செயற்பாடுகளில் ஈடுபடும், மலரும் பூமி கூட்டுறவு சங்கத்தின் பெண் உறுப்பினர்கள் குழந்தை பராமரிப்பில் சிரமங்களை எதிர்கொள்கின்றமையால், ஆசிரியரொருவரைப் பெறுவதற்கான உதவியையும் LEED+ வழங்கியது.



# சமூக மனப்பாங்கை மாற்றுதலும் பெண்கள் தமது சமூகங்களில் எழுந்து நிற்பதை வல்லமைப்படுத்தலும்.

பெண்கள் வரலாற்று ரீதியாக பல அம்சங்களில் ஓரங்கட்டப்பட்டவர்களாகவே இருந்துள்ளனர். இன்றுகூட பெண்களைக் கலாசார, சமூக, பொருளாதார ரீதியில் பாரபட்சப்படுத்துவது நியாயப்படுத்தக்கூடிய நடத்தையாகவே பார்க்கப்படுகின்றது. இந்தப் புறந்தள்ளலின் அடிப்படைக் காரணியை இல்லாதொழிப்பதும் சமமற்ற அதிகாரக் கொள்கையை மாற்றியமைப்பதும் சமூகத்தின் கூட்டான சிந்தனை மாற்றமொன்றிலேயே உள்ளது. இத்தகைய நிலைமாற்றத்தைத் தூண்டுவதற்காக பயன்படுத்தக்கூடிய பிரதான மூலம் அறிவுப்பரிமாற்றமாகும்.

## அணுகுமுறையை நடைமுறைப்படுத்தல்

- பெண்களின் பொருளாதார வல்லமைப்படுத்தல் சம்பந்தமாக நிறுவன மட்டத்திலுள்ள மனப்பாங்குகளைத் விளித்துரைப்பதற்கும் அறிவுப் பரிமாற்று செயற்பாட்டை நிலைபெறச் செய்வதற்கும் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி (ToT) என்னும் நிகழ்ச்சிகளை LEED+ அரசாங்க பதவிநிலையினர்களுக்கு நடாத்தியது.

- பெண்களின் தலைமைத்துவ வகிபாகத்தை மேம்படுத்தும் முகமாக, சிறிய மற்றும் சிறிய நடுத்தர பெண்தொழில் முயற்சியாளர்கள், கூட்டுறவு சங்கங்களிலுள்ள பெண்களுக்கும் சமூக செயற்பாடுகளில் ஈடுபடும் பெண்களுக்கும் வழிகாட்டல் உதவிகளை வழங்குவதற்கான தூண்டுதல் வழங்கப்படுகின்றது.

- உரையாடலுக்கான தளத்தை உருவாக்கிக் கொடுக்கும் முகமாக, கூட்டுறவு சங்க உறுப்பினர்கள், பதவிநிலையினர், ஆணையாளர்கள் போன்றோரின் பங்கேற்புடன் மாகாண மட்ட கலந்துரையாடல் மன்றங்களை LEED+ நடாத்தியது.

- இந்நிகழ்வானது, பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்தல், பெண் வியாபார உரிமையாளர்களினால் எதிர்நோக்கப்படும் தனித்துவமான சவால்கள், வெற்றிகரமான பெண் முயற்சியாண்மையாளர்களின் அனுபவப் பகிர்வுகளை உரையாடுவதற்கான வாய்ப்பை வழங்கியது.

- LEED+ ஆனது, கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்களில் பெண்களின் அறிவு மற்றும் திறன்களை விரிவாக்கும் முகமாக, அவர்களுக்கு விவசாய மற்றும் மீன்பிடி செயல்முறை மையங்கள் மற்றும் மேல் மாகாணத்திலுள்ள மேலதிக மையங்களை மதிப்பீடு செய்வதற்கான வெளிக்களப் பயணங்களை ஒழுங்குபடுத்தியது. பெறுமதிமிக்க திறன்களின் பெருக்கத்திற்கான உதவியின் போதும், ஏனைய பெண்களுடனான உறவாடலின் போதும் எண்ணங்களைப் பரிமாற்றுதல், வலையமைப்பை ஏற்படுத்துதல் மற்றும் தன்னம்பிக்கையை ஈட்டுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது.

### "கிராமிய மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவில் நிறுவனங்களை நடாத்திச் செல்லும் என்னைப் போன்ற பெண்கள், சமூக இடர்களை மீறி, ஏனைய பெண்கள் தனித்து நிற்பதற்கு உதவி செய்கின்றோம் எனும் உண்மையை எண்ணிப் பெருமை கொள்கின்றோம்."

**சர்மிளா, உரிமையாளர், STR தொழில் முயற்சிகள் - கிளிநொச்சி, இலங்கை.**

பெண் முயற்சியாண்மையாளரான சர்மிளா அவரது சொந்த தொழிலை ஆரம்பிக்கும் போது ஏற்பட்ட பல்வேறு இடர்களைத் தகர்த்தெரிந்துள்ளார். அவர் பலருக்கு உத்வேகமும் முன்மாதிரியுமான ஒருவராவார். LEED+ ஆனது அவரது வியாபாரத்தை வலுப்படுத்துவதற்கான தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நியமங்கள் மற்றும் வழிகாட்டல்கள் உள்ளிட்ட பல வழிகளில் உதவி வழங்கியுள்ளது.

# நிறுவன மற்றும் முறைமைசார் இடர்பாடுகளைக் கண்டறிதலும் தீர்த்துவைத்தலும்

சமத்துவமின்மையின் பிடியில் உள்ள சமூகச் சூழலில் பெண்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். பால்நிலை ரீதியான உணர்வுப்பூர்வமான மறுமொழிகளை விருத்தி செய்வதும் இத்தடைகளைத் தீர்ப்பதற்கான உபாயங்களை வகுத்தலும் முக்கியமானதாகும்.

## அணுகுமுறையை நடைமுறைப்படுத்தல்

- LEED+ ஆனது பெருமளவிலான ஆண் மைய கலாச்சாரம் மற்றும் தீர்மான செயல்முறையைக் கொண்டுள்ள மீன்பிடித் துறை கூட்டுறவுகளில் ஓர் மாற்றத்தை உருவாக்கத்திற்காக செயற்பட்டது. கூட்டுறவில் உறுப்புரிமை, வள ஒதுக்கீடு, உறுப்பினர்களுடைய பொருளாதார பங்குபற்றுதல் மற்றும் சேவைகள் தொடர்பான பெரும்பாலான முடிவுகள் ஆண்களாலேயே எடுக்கப்படுகின்றன. பெண் உறுப்பினர்களுடைய கருத்துக்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாதினால் இவை அவர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படுத்துவதில்லை. இச் செயற்றிட்டமானது, உறுப்பினர்களுக்கும் சபைக்குமான விழிப்புணர்வு அமர்வுகளினூடாகவும், மாகாண மட்ட கலந்துரையாடல்கள் மூலமும் இதனை மாற்றும் வண்ணம் செயற்பட்டது. பெண் உறுப்பினர்களை அதிகமாக உட்சேர்ப்பதற்கு கொள்கைத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ச்சியான அணி திரட்டல் மற்றும் பரிந்துரைப்பு முயற்சிகள் கூட்டுறவு சபையில் பெண்களின் பங்குபற்றலில் அதிகரிப்பை காண்பித்ததுடன் இப் பிரதிநிதித்துவம் கூட்டுறவுச் சேவைகளின் ஏற்பாடு, வளங்களின் ஒதுக்கீடு, பெண்களினுடைய பொருளாதார பங்குபற்றலை அதிகரித்தல் போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்த வழிவகுத்தது.

- வலைப்படு பிரதேசத்தின் பிரதான வாழ்வாதார வளம் மீன்பிடி என்பதைக் கருத்திற்கொண்டு LEED+ ஆனது பெண்களின் பங்குபற்றலை பொருளாதார செயற்பாடுகள் மற்றும் வலைப்படு மீன்பிடிக் கூட்டுறவில் உறுதிப்படுத்தும் வண்ணம் செயற்பட்டது. ஆரம்பத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனியான கலந்துரையாடல் மன்றங்கள் ஒழுங்குசெய்யப்பட்டன. அதில் பெண்கள் தாங்கள் எதிர்கொண்ட இன்னல்கள் தொடர்பாக கூட்டாகக் கலந்துரையாடுவதற்கான வாய்ப்புக்கிட்டியது. அதேவேளை அவர்கள் அவற்றை கதைப்பதற்கான ஊக்குவிப்புக்களும் உந்துதல்களும் அளிக்கப்பட்டது. மேலும், ஆண்களின் கலந்துரையாடலின் போது பால்நிலை அடிப்படையிலான ஆட்சேர்ப்பு பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல் தொடர்பாகவும் மீன்பிடியில் பெண்களின் பங்குபற்றலினுடைய முக்கியத்துவம் பற்றியும் பேசப்பட்டது. பின்னர் இரு பாலாரும் ஒன்றிணைந்து அவர்களது கருத்துகளை எழுப்புவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது. ஆண் மற்றும் பெண்களுக்கிடையிலான உரையாடல்களின் அதிகரிப்பு மற்றும் சில இடர்பாடுகளினுடைய நீக்கம் என்பவற்றின் விளைவானது, மீன்பிடி மற்றும் கூட்டுறவு உறுப்புரிமையில் பெண்களின் பங்குபற்றுதலுக்கு வழிவகுத்தது.

- புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் விவசாயத்தில் ஈடுபடும் பெண்களுக்கு குறைந்தளவிலான உதவியே வழங்கப்படுகின்றது. இதனை தீர்க்கும் முகமாக, LEED+ ஆனது வரையறுக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பெண் முயற்சியாண்மையாளர் கூட்டுறவு சங்கத்தை தாபிப்பதற்கு அவர்களுக்கு உதவி செய்தது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெருமளவான பெண்கள் மற்றும் பெண் தலைமைத்தாங்கும் குடும்பங்கள் (FHH) பிரதானமாக ஆண்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த கூட்டுறவு சங்கங்களில் பங்கேற்க முடியாமையினால், இப் புதிய நிறுவனமானது பெண்கள் முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவ வகிபங்குகளில் ஈடுபடுவதற்கும், புதிய வணிக பங்குடைமையை விருத்தி செய்வதற்கும், அவர்களது தேவைகள் மற்றும் நலன்களைக் கலந்துரையாடுவதற்கும் இடமளித்தது. மேலும் இது பெண்களின் திறன்கள் பற்றி சமுதாயத்தில் நிலவும் பால்நிலை சார் வேறுபாடுகள் தொடர்பான பார்வையைத் தகர்த்தெறிய உதவிது.

**“ஒன்றிணைந்து குரல் எழுப்புவதற்கு கூட்டுறவு இயக்குனர்சபைமட்டத்தில் அதிகளவான பெண்கள் காணப்பட வேண்டும். இதனை நடைமுறைப்படுத்தல் என்பது அனைத்து பெண்களினதும் பொறுப்பாகும்.”**

**கலைச்செல்வி, தலைவர், புதுக்குடியிருப்பு பெண் முயற்சியாண்மையாளர் கூட்டுறவு சங்கம்**

LEED+ இனால் உதவியளிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பெண் முயற்சியாண்மையாளர் கூட்டுறவு சங்கமானது, இலங்கையின் வடமாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முதலாவது பெண்கள் கூட்டுறவாகும். இதனூடாக பெண் முயற்சியாண்மையாளர்களால் கூட்டு கொள்முதல், சந்தைப்படுத்தல் போன்ற வசதிகளைப் பெற்றிட முடிவதுடன் கடன் வசதிகள் மற்றும் சமூக நலத் திட்டங்களுக்கான வசதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.



# பால்நிலை முதன்மைப்படுத்துதலை நோக்கிய மாகாணத்தின் முறைமைசார் கட்டமைப்பை வலுப்படுத்தல்

தற்போது, பெண்களின் சமூக பங்குபற்றலை விருத்தி செய்வதை நோக்கிய உதவிச் சேவைகளை வழங்குவதற்கான தனியான அலகொன்றோ அல்லது வள ஒதுக்கீடுகளோ வட மாகாணத்தில் இல்லை. அடிமட்டத்திலுள்ள பெண்கள் நிதியியல், சந்தை தகவல், தொழில்நுட்ப உதவி, திறன் மற்றும் பயிற்சி போன்ற சேவைகளை நிலைநாட்டுதல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அணுகுவதில் இடர்களை எதிர்நோக்குகின்றனர். இவ்வாறான சவால்களை குறைப்பதற்கு, வட மாகாண மகளிர் விவகார அமைச்சு மாகாணத்திற்கான பால்நிலைக் கொள்கையை விருத்தி செய்வதற்கான முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. Meso மட்டத்தில் (நுண்பாகத்திற்கும் பேரினத்திற்கும் இடைப்பட்ட மட்டம்) பால்நிலை முதன்மைப்படுத்துதலை உறுதிப்படுத்துவ-தற்கும் மகளிரின் பங்குபற்றலை அதிகரிப்பதற்கும் சேவைகளை அணுகுவதற்கும் துணைபுரிகின்றன. இக்கொள்கையானது, பால்நிலை முதன்மைப்படுத்துதலைப் பேணிக் காப்பதற்கான முனைப்புகளை அடிமட்டத்திலிருந்து முன்னெடுக்கும்.

## அணுகுமுறையை நடைமுறைப்படுத்தல்

- LEED+ ஆனது பால்நிலைசார் கொள்கையை வரைவு செய்வதில் பங்குபற்றல் அணுகுமுறையை வளப்படுத்தும் முகமாக மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் ஆலோசனை கருத்தரங்குகள் மற்றும் சந்திப்புகளை நடாத்துவதற்கான நிதியியல் உதவியை வழங்குகின்றது. அத்தகைய கலந்துரையாடலானது சமூக மட்டத்திலுள்ள பல்வேறுபட்ட பங்குதாரர்களின் பங்களிப்புகளுக்கு இடமளிக்கின்றது.

- LEED+ ஆனது கொள்கை வரைவிற்கு ஆதரவு வழங்கும் முகமாக, சட்ட ஆலோசகர்கள் உட்பட அமைச்சிற்காக அமைச்சினை முன்நிலைப்படுத்தக்கூடிய வல்லுனர்களை உள்வாங்குவதுடன் அவற்றுக்கான தொழில்நுட்ப உள்ளீடுகளையும் வழங்குகின்றது.

**"பால்நிலைசார் கொள்கையானது வடமாகாணத்திற்கு தேவையான அத்தியாவசியமான சாதனமாவதுடன் அது திணைக்கள மட்டத்தில் பால்நிலையை முதன்மைபடுத்துவ-தற்கும் அதனூடாக சமூக மட்ட மாற்றங்களை அடைவதற்கும் உதவும்."**

நிருபராஜ் லாஹினி, உதவி செயலாளர், மகளிர் விவகார, புனர்வாழ்வு, சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கல், உணவு விநியோக, தொழிற்துறை, முயற்சியாண்மை மேம்பாடு, மற்றும் வர்த்தக வாணிப அமைச்சு, வடக்கு மாகாணம்.

**"நிலைமாற்றத்தினுடனான பால்நிலை மாற்றத்திற்கு காலம் எடுக்கும், ஆனால் டுநுநுனூ அத்தகைய மாற்றங்களுக்கான அடித்தளத்தை உருவாக்கி வருவதுடன் ஏற்கனவே அதற்கான சாதகமான அறிகுறிகளும் காணப்படுகின்றன."**

கலாநிதி. தோமஸ் கிறிங், பிரதம தொழிநுட்ப ஆலோசகர், சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம்- இலங்கை, LEED+ செயற்றிட்டம்

Supported by the Australian Government Department of Foreign Affairs and Trade (DFAT) and the Government of Norway, the LEED+ (Local Empowerment through Economic Development and Reconciliation) project is part of the ILO's Global Jobs for Peace and Resilience programme.

For further information, contact:

Dr. Thomas Kring,
Chief Technical Advisor,
ILO, Sri Lanka
kring@ilo.org

Mehala Sabeswaran,
Gender and Disability Officer – LEED+,
ILO, Sri Lanka
sabeswaran@ilo.org

Kaushalya Kathireson
Communication and
Public Information Officer – LEED+,
ILO, Sri Lanka
kathireson@ilo.org

ilo.org | Twitter | Facebook | Instagram